**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR</u>**

**DEPOSITION OF WITNESS**

**D.W.3**

**O.S No. 100/2014**

| | | |
|---|---|---|
| **Name** | : | **சுப்பிரமணி** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 07.07.2026**

**பி.வா.சா.3 முதல் விசாரணை:-**

1) எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு 3 வது சாட்சி. ஆவணங்கள் எதுவும் இல்லை.

**குறுக்கு விசாரணை**

2) வாதிக்கும் பிரதிவாதிகளின் தந்தை வெங்கடேசன் என்பவருக்கும் 1999ம் ஆண்டு பாக பிரிவினை ஏற்பட்டது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றால் சரிதான். நாங்கள் 10 பேர் சேர்ந்து பாக பிரிவினை செய்துவிட்டோம். அந்த 10 நபர்கள் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அந்த 10 பேரும் தற்போது உயிருடன் இல்லை. பத்திரம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. வாய்மொழியாகத்தான் பிரித்து கொண்டார்கள். வெங்கடேசன் தன் பெற்றோர் சம்மதம் இல்லாமல் தன் விருப்பப்படி 3 திருமணங்கள் செய்து கொண்டார் என்றால் சரிதான். மருதை கவுண்டரின் அப்பா சம்பாதித்த

சொத்து என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலம் பாரா 5ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றும் வழக்கிற்காக அவ்வாறு பிரிக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) மருதை கவுண்டர் வெங்கடேசனுக்கு சொத்துக்களை பிரித்து கொடுக்கவும் இல்லை என்றும் அவ்வாறு கொடுப்பதற்கு அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2026.07.07 17:43:49 +0530

**Subordinate Judge, Attur.**